**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**
**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாள் வியாழக்கிழமை**
2056 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் மார்கழி மாதம் 15 ம் நாள்
**E.P.No.49/2023**
**in**
**O.S.No.230/2012**
(CNR.No : TNDG190003732023)

1. அஜிஸ் (இறப்பு)

2. ஆயிஷாபீவி

3. பாத்திமாகனி

4. ரெஜினாபேகம்

5. சம்சத்பேகம்

6. சபீராபேகம்

7. சாதிக்அலி .... மனுதாரர்கள் /வாதிகள்

(இறந்து போன 1ம்மனுதாரரின் வாரிசுகளான 2 முதல் 7 மனுதாரர்கள் இ.ம.எண்.83/2024 ல் கடந்த 18.02.2025 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.)

// எதிராக //

பிரபு .... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இவ்வழக்கு கடந்த 06.02.2023 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 19.07.2023–ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 28.01.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.K.C.ஜெகநாதன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.S.கிருஷ்ணகுமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் கடந்த 06.10.2025 ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்கு உட்படுத்தப்பட்டு, மனு, பிரமாணப்பத்திரிக்கை, வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வழக்குரைஞரின் வாதுரை கேட்கப்பட்டும், நாளதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் :

**<u>உத்தரவு</u>**

**1.** இந்த நிறைவேற்று மனுவானது காலஞ்சென்ற வாதியின் வாரிசுகளான 2 முதல் 7 மனுதாரர்களை சேர்த்துக்கொண்டும், எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட பற்றுகை செய்யப்பட்ட சொத்துக்களுக்கு ஏலஅறிவிப்பு அனுப்பியும், ஏலஇஸ்தியார் பிறப்பித்து ஏலம்விட்டு தொகையை வசூலித்து கொடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 66 ன் கீழ் இம்மனு மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

இறந்து போன 1ம் மனுதாரர், எதிர்மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கு எண்.230/2012 வழக்கினை மாண்புமிகு பழனி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் மனுதாரருக்கு ஆதரவாக கடந்த 23.12.2014 ஆம் தேதியில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கில் இ.ம.எண்.443/2012 மனுவானது அசல் வழக்கின் தீர்ப்பாணைக்கு முன்பாக பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பற்றுகை செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின்படி எதிர்மனுதாரரின் சொத்தானது பற்றுகை செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட உடன்ஜப்தி மனுவில் பற்றுகை செய்யப்பட்ட இந்நிறைவேற்று மனு சொத்திற்கு ஏலஇஸ்தியார் பிறப்பித்து, ஏலம்விட்டு தொகையை வசூலித்து கொடுக்க மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இம்மனுவில் 7ம் மனுதாரர் தன்னை வா.சா.1 ஆக விசாரித்தும், மனுதாரர் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவை அனுமதிக்க வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்பதே பிரச்சனையாகும்.

**5. பிரச்சனைக்கான தீர்வு :**

**5.1.** வழக்காவணங்களை பரிசீலனை செய்யும்போது, மனுதாரர், எதிர்மனுதாரர் மீது கடனுறுதிசீட்டின் பேரிலான கடன் தொகையை வசூல் செய்யக்கோரி பழனி சார்பு

நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.230/2012 வழக்கில் வாதிக்கு ஆதரவாக கடந்த 23.12.2014 ம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கில் இ.ம.எண்.443/2012 மனுவானது தீர்ப்பாணைக்கு முன்பாக பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பற்றுகை செய்வதற்காக மாண்புமிகு பழனி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, எதிர்மனுதாரரின் சொத்தானது பற்றுகை செய்யப்பட்டுள்ளது. தீர்ப்பாணை தொகையை வசூல் செய்ய வேண்டி மனுதாரர் தரப்பில் பழனி சார்பு நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு எண்.116/2016 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரருக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகையை எதிர்மனுதாரர் செலுத்தாத காரணத்தினால் நிறைவேற்று மனுச்சொத்துக்களின் மதிப்பை நிர்ணயம் செய்வதற்காக Property Test செய்யப்பட்டு, கடந்த 04.01.2019 ஆம் தேதி நிறைவேற்று மனுசொத்துக்கள் முதுநிலைகட்டளைதாரரால் ரூ.70,00,000/- என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் நிறைவேற்று மனுவில் சொத்தின் மதிப்பு எதுவும் குறிப்பிடவில்லை. மனுச்சொத்துக்களை ஏலநடவடிக்கைக்கு உட்படுத்தும் வகையில் Sale papers தாக்கல் செய்யப்பட்டு, ஏலசரத்துக்களை நிர்ணயம் செய்ய என வாய்தா போடப்பட்டு, பிரதிவாதிக்கு பாத்தியமான சொத்துக்களை ஏலத்திற்கு கொண்டு வர தாக்கல் செய்யப்பட்ட பழனி, சார்பு நீதிமன்ற நிறைவேற்று மனு எண்.116/2016 ல் மனு சொத்துக்களின் மதிப்பு ரூ.70,00,000/- என நீதிமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்டு ஏலத்திற்கு உத்தரவிடப்பட்டு, கடந்த 08.04.2019 ம் தேதி ஏலம் விடப்பட்டுள்ளது.

**5.2.** மனு சொத்துக்களின் மதிப்பு ரூ.70,00,000/- என்று நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட தொகை அதிகமாக இருந்ததால், யாரும் ஏலம் கேட்க முன்வராத காரணத்தினால் மனு சொத்துக்களின் மதிப்பு ரூ.70,00,000/- என்றிருப்பதை ரூ.20,00,000/- ஆக குறைக்கக்கோரி மனுதாரர் தரப்பில் இடை மனு எண்.85/2019 இன் நிறைவேற்ற மனு எண்.116/2016 மனுவானது கடந்த 17.06.2019 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 30.08.2022 ம் தேதியன்று மனு சொத்துக்களின் மதிப்பானது ரூ.70,00,000/-ல் இருந்து ரூ.65,00,000/- ஆக குறைத்து மதிப்பீடு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

**5.3.** இந்நிலையில், பழனி சார்பு நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு எண்.116/2016 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு எண்.29/2022 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நிலுவையில் இருந்த மனுவில் மனுதாரரான அஜிஸ் என்பவர் காலமாகிவிட்டதாகவும், அவரது வாரிசுகளால் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், நிறைவேற்று மனு எண்.29/2022 மனுவை வலியுறுத்தவில்லை என்ற குறிப்பாணை தாக்கல் செய்ததன் அடிப்படையில் மனுவானது 30.06.2023ம் தேதி தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இறந்து போன மனுதாரர் அஜிஸ் என்பவரின் வாரிசுகளான 2 முதல் 7 வாதிகளை அசல் நிறைவேற்று மனுவில் தரப்பினர்களாக சேர்க்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.43/2023 மனுவானது கடந்த 03.06.2024ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில், அசல் நிறைவேற்று மனுவில் 2 முதல் 7 மனுதாரர்கள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு, நிறைவேற்று மனு எண்.49/2023 என்ற எண்ணில் கடந்த 19.07.2023ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**5.4.** வழக்காவணங்களை பரிசீலனை செய்யும்போது, மனுதாரர், எதிர்மனுதாரர் மீது கடனுறுதிசீட்டின் பேரிலான கடன் தொகையை வசூல் செய்யக்கோரி பழனி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.230/2012 வழக்கில் வாதிக்கு ஆதரவாக கடந்த 23.12.2014ம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு, அசல் வழக்கில் இ.ம.எண்.443/2012 மனுவானது தீர்ப்பாணைக்கு முன்பாக பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பற்றுகை செய்வதற்காக மாண்புமிகு பழனி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, எதிர்மனுதாரரின் சொத்தானது பற்றுகை செய்யப்பட்டுள்ளது. மனுச்சொத்து பற்றுகை செய்துள்ளதற்கான பதிவுகள் வில்லங்க சான்றிதழில் இடம் பெற்றுள்ளது. நிறைவேற்று மனு சங்கதிகளை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுஉரை தாக்கல் செய்யப்படவில்லை. அசல் வழக்கில் மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது வரை மனுதாரர் தீர்ப்பாணையின் பலனை அடைய இயலாத நிலையில் உள்ளார். எனவே, மனுதாரர்/ தீர்ப்பாணை பெற்றவர் அசல் வழக்கின் தீர்ப்பாணையின் பலனை பெற

ஏதுவாக மனுச்சொத்துக்களை ஏலநடவடிக்கைக்கு உட்படுத்தும் வகையில் Sale papers தாக்கல் செய்யும்பொருட்டு, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. மனுவின் தன்மையை கருத்தில்கொண்டு செலவுதொகை பற்றிய உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.

**6. முடிவில்,**

**இம்மனு செலவுதொகையின்றி அனுமதித்து Sale Papers தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. Sale Papers by 09.02.2026.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாள் அவையறிய திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.01.29 14:07:30 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**

**மனுதாரர்கள் /வாதிகள் தரப்பு சாட்சி** – இல்லை.
**மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** – இல்லை.
**எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சிகள்** – இல்லை.
**எதிர்மனுதாரர் /பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** – இல்லை.

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.01.29 14:07:36 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**
**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாள் வியாழக்கிழமை**
2056 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் மார்கழி மாதம் 15 ம் நாள்
**E.P.No.49/2023**
**in**
**O.S.No.230/2012**
(CNR.No : TNDG190003732023)

1. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் டவுன், சம்சுதீன்காலனி, க.எண்.10/34B – 5/4 ல் வசித்து வந்த S.A.நாகூர்ராவுத்தர் மகன் முஸ்லீம் வயது சுமார் 55 உள்ள அஜிஸ் (இறப்பு)

2. மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், தல்லாகுளம், கே.புதூர், ராமவர்மா நகர், 6 வது தெரு, க.எண்.11 ல் வசிக்கும் நாகூர்ராவுத்தர் மனைவியும், அஜிஸின் தாயாருமான முஸ்லீம் சுமார் 85 வயதுள்ள ஆயிஷாபீவி

3. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் டவுன், சம்சுதீன்காலனி, க.எண்.10/34B – 5/4 ல் வசித்து வந்து, ஒட்டன்சத்திரம் சிங்கப்பூர் பிளாசாவில் இருக்கும் லேட்.அஜிஸ் மனைவி முஸ்லீம் வயது சுமார் 62 உள்ள பாத்திமாகனி

4. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் டவுன், சம்சுதீன்காலனி, க.எண்.10/34B – 5/4 ல் வசித்து வந்து, ஒட்டன்சத்திரம் சிங்கப்பூர் பிளாசாவில் இருக்கும் லேட்.அஜிஸ் மகளும், ராஜாமுகமது மனைவியுமான முஸ்லீம் வயது சுமார் 45 உள்ள ரெஜினாபேகம்

5. மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், தல்லாகுளம், கே.புதூர், ராமவர்மா நகர், 6 வது தெரு, க.எண்.11 ல் வசிக்கும் அஜிஸ் மகளும், அவர்களின் மனைவியுமான முஸ்லீம் சுமார் 43 வயதுள்ள சம்சத்பேகம்

6. மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், தல்லாகுளம், கே.புதூர், ராமவர்மா நகர், 6 வது தெரு, க.எண்.11 ல் வசிக்கும் அஜிஸ் மகளும், அவர்களின் மனைவியுமான முஸ்லீம் சுமார் 42 வயதுள்ள சபீராபேகம்.

7. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் டவுன், தென்றல்நகர், காமாட்சியம்மன் கோவில் எதிரில், க.எண்.185 1/9 ல் வசிக்கும் ரத்தினநாடார் இல்லத்தில் வசிக்கும் அஜிஸ் மகன் முஸ்லீம் வயது சுமார் 40 உள்ள சாதிக்அலி .... மனுதாரர்கள் /வாதிகள்

(இறந்து போன 1ம்மனுதாரரின் வாரிசுகளான 2 முதல் 7 மனுதாரர்கள் இ.ம.எண்.83/2024 ல் கடந்த 18.02.2025 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.)

// எதிராக //

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் டவுன் மற்றும் அஞ்சல், A.S.M. பேட்டை, க.எண்.1694/466 ல் வசிக்கும் கிருஷ்ணமூர்த்தி மகன் இந்து வயது சுமார் 41 உள்ள பிரபு .... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இந்த நிறைவேற்று மனுவானது காலஞ்சென்ற வாதியின் வாரிசுகளான 2 முதல் 7 மனுதாரர்களை சேர்த்துக்கொண்டும், எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட பற்றுகை செய்யப்பட்ட சொத்துக்களுக்கு ஏலஅறிவிப்பு அனுப்பியும், ஏலஇஸ்தியார் பிறப்பித்து ஏலம்விட்டு தொகையை வசூலித்து கொடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 16 மற்றும் 66 ன் கீழ் இம்மனு மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனு தாக்கலான நாள்** – 06.02.2023

**மனுவின் மீதான வில்லை** – ரூ.20/–

இவ்வழக்கு கடந்த 06.02.2023 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 19.07.2023–ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 28.01.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.K.C.ஜெகநாதன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.S.கிருஷ்ணகுமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் கடந்த 06.10.2025 ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்கு உட்படுத்தப்பட்டு, மனு, பிரமாணப்பத்திரிக்கை, வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வழக்குரைஞரின் வாதுரை கேட்கப்பட்டும், நாளதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பின்வரும் கட்டளை மற்றும் உத்தரவாணையை வழங்குகின்றது.

<u>உத்தரவாணை</u>

1. **இம்மனு செலவுதொகையின்றி அனுமதித்து Sale Papers தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. Sale Papers by 09.02.2026.**
2. **செலவுதொகை இல்லை**.

**சொத்துவிவரம்**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் சார்பதிவகம், ஒட்டன்சத்திரம் கிராமம் (ஏ.எஸ்.எம்.பேட்டை)

1. சர்வே 210–க்கு புதிய சர்வே 210/1ஏ நம்பரில் ஹெக் 1.95.76 உள்ளதில் வடபுறம் உள்பகுதியில் அமைந்துள்ளதும், ஒட்டன்சத்திரம் – பழனி சாலையில் தாராபுரம் பிரிவு சாலையிலிருந்து மேற்கு முகமாக ஏ.எஸ்.எம். பேட்டை வரைப் பகுதியில் ரோட்டிற்கும் வடபுறம் உள்பகுதியில் அமைந்துள்ள சொத்துக்கு மால் விபரம் :–

| | | |
|---|---|---|
| தென்வடல் ஒடைக்கும் | – | கிழக்கு |
| கிழமேல் செல்லும் கழிவுநீர் வாய்க்காலுக்கும் | – | தெற்கு |
| இதன் 2–லக்க சொத்திற்கும் | – | மேற்கு |
| பொது கிழமேல் பாதைக்கும் | – | வடக்கு |

இதற்குள் கிழமேல் அடி 40, தென்வடல் 54 1/2 அடி ஆக 2180 சதுரடி உள்ள இடமும்,

2. சர்வே 210–க்கு புதிய சர்வே 210/1ஏ நம்பரில் ஹெக் 1.95.76 உள்ளதில் வடபுறம் அமைந்துள்ளதும், ஒட்டன்சத்திரம் – பழனி சாலையில் தாராபுரம் பிரிவு சாலையிலிருந்து மேற்கு முகமாக ஏ.எஸ்.எம் பேட்டை வரைப் பகுதியில் ரோட்டிற்கும் வடபுறம் உள்பகுதியில் அமைந்துள்ள சொத்துக்கு மால் விபரம் –

| | | |
|---|---|---|
| இதன் 1–லக்க சொத்திற்கும் | – | கிழக்கு |
| கிழமேலாக செல்லும் கழிவுநீர் வாய்க்காலுக்கும் | – | தெற்கு |
| எம்.பி.பெரியசாமி அவர்கள் இடத்திற்கும் | – | மேற்கு |
| பொது கிழமேல் பாதைக்கும் | – | வடக்கு |

இதற்குள் கிழமேல் அடி வடபுறம் 5 1/2 தென்புறம் அடி 3 1/2 தென்வடல் இருபுறமும் 54 1/2 அடி ஆக 245 1/4 சதுரடி உள்ள இடமும்,

ஆக இரண்டு அயிட்டமும் சேர்ந்து 2425 1/4 சதுரடி உள்ள இடமும், மேற்படி

இடத்தில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு செங்கல், சுண்ணாம்புக்காரை கொண்டு நாட்டு மரங்களைக் கொண்டு கிழமேல் இருபுறமும் 36 அடி, தென்வடல் இருபுறமும் 50 1/4 அடி, ஆக 1809 சதுரடி அளவில் கீழ்தளத்தில் சிமெண்ட் தரை அமைப்பு கொண்ட தெற்குப் பார்த்து கட்டியுள்ள கதவு எண்.446/ஜி1/9, 446/எப்1/9, 446/ஜி/9 உள்ள கதவு எண்கள் கொண்ட ஆர்.சி.சி.லாகட கட்டிடமும், மேலும் மேற்படி கட்டிடத்தில் வடமேற்குப் பக்கம் கிழமேல் 5 1/2 அடி, தென்வடல் 10 1/2 அடி ஆக 57 3/4 சதுரடி அளவில் கட்டப்பட்டுள்ள ஆர்.சி.சி லாகட குளியலறை ஒன்றும், மேலும் மேற்படி கட்டிடத்தின் தென்புறத்தில் தென்வடல் 3 1/2 அடி அகலமும், கிழமேல் 36 அடி நீளமும், ஆக 126 சதுரடி அளவில் உள்ள சன்சைடு வகையறாவும், மேலும் மேற்படி கட்டிடத்திலிருந்து முதல் மாடிக்குச் செல்லும் 5 3/4 அடி அகலமும், 11 3/4 அடி நீளமுமாக 68 சதுரடியில் உள்ள மாடிப்படிக்கட்டு வகையறாவும்,

மேலும் மேற்படி தரை தளத்தில் அமைந்துள்ள வீட்டின் மேல் முதல் மாடியாக கிழமேல் 36 அடியும், தென்வடல் 31 1/2 அடியும் ஆக 1134 சதுரடி அளவில் தரை சாதாரண கலர் மொசக் போடப்பட்டுள்ள ஆர்.சி.சி லாகட கட்டிடமும், மேலும் மேற்படி முதல் மாடியில் கிழமேல் 11 அடி தென்வடல் 4 3/4 அடி ஆக 52 1/4 சதுரடி அளவுள்ள அறை ஒன்றும், மேலும் மேற்படி முதல் மாடியில் தென்வடல் 3 1/2 அடி, கிழமேல் 36 அடி, ஆக 126 சதுரடி அளவில் உள்ள சண்சைடு வகையறாவும், மேலும் முதல் மாடியில் கிழமேல் 4 3/4 அடி, தென்வடல் 5 3/4 அடி ஆக 27 1/2 சதுரடி அளவில் உள்ள தண்ணீர் தொட்டி வகையறாவும்,

மேலும் மேற்படி முதல் மாடியில் கிழமேல் 18 அடி தென்வடல் 9 1/2 அடி ஆக 171 சதுரடி அளவில் மேற்கூரை ஏ.சி.சி ஆஸ்பெஸ்டாஸ் வேய்ந்த அறை ஒன்றும்,

மேலும் மேற்படி வீடுகளுக்கேற்பட்ட மின் இணைப்பு எண்கள் 383 (முதல் மாடியில்) 384 (தரைத்தளத்தில்) 385 உள்ளதில் அதன் மீட்டர் டெபாசிட் வகையறா உட்படவும், மேற்படி வீடுகளுக்கேற்பட்ட கதவு எண்கள்.446/ஜி 1/9, 446 எப்/9, 446 ஜி/9 உள்ளதும், மேலும் மேற்படி கட்டிடத்தில் உள்ள ஒட்டன்சத்திரம் நகராட்சி குடிநீர் குழாய் இணைப்பு எண்.747, 1763 உள்ளதும், அதன் மீட்டர் டெபாசிட் வகையறா உள்படவும் மற்றும் கட்டிடத்தில் உள்ள சகலமும் உள்படவும்.

மேலும் மேற்படி வீடுகளுக்கு முன்புறமாக சுமார் 4 1/2 அடி உயரமும், நீளம் 54 1/2, 54 1/2 ஆக 109 அடி நீளமும் உள்ள சாதாரண செங்கல், சுண்ணாம்புக் காரை சுற்றுச்சுவர் வகையறாக்களும், மேலும் மேற்படி வீடுகளுக்கேற்பட்ட சுமார் 4 அடி அகலமும், 7 அடி உயரமும் கொண்ட சாதாரண இரும்புக் கம்பிகள் கொண்டு அமைக்கப்பட்டுள்ள கேட் வகையறாக்களும், மேலும் மேற்படி வீடுகளுக்கேற்பட்ட ஆழ்துளை குழாய் கிணர் (போர்வெல்) வகையறாக்களும், அதற்கேற்பட்ட 1 ஹெச்.பி மோனோபிளாக் மோட்டார் வகையறாக்களும், மேலும் மேற்படி வீடுகளுக்கேற்பட்ட கழிவறை வகையறாக்கள் மற்றும் மேற்படி வீடுகளுக்கேற்பட்ட சகல பாத்தியங்கள் முழுவதும்.

மேலும் மேற்படி வீடுகளுக்கு, மேற்படி சர்வே 210 நிரில் தென்புறம், திண்டுக்கல்–பழனி ரோட்டிலிருந்து வடக்கு ஏ.எஸ்.மாணிக்கம்பிள்ளை அவர்களுக்கும், எ.சண்முகவேலுபிள்ளை அவர்களுக்கும் பாத்தியப்பட்ட கட்டிடங்களுக்கு மத்தியில் கிழமேல் 10 1/2 அடி அகலமும், மேல்புறம் தென்வடல் 50 அடி நீளமும், கீழ்புறம் தென்வடல் 44 அடி நீளமும் உள்ள பாதையிலும், அதைத் தொடர்ந்து வடக்கு முகமாக கிழமேல் 20 அடி அகலமும், தென்வடல் 58 அடி நீளமும் உள்ள பாதையிலும், அதைத் தொடர்ந்து வடபுறம் ஏ.எஸ்.மாணிக்கம்பிள்ளை அவர்களால் வீட்டு மனைக்காக பிரித்து போடப்பட்டிருந்த இடத்தில் கிழமேல் 20 அடி அகலத்தில் உள்ள பாதை வரை கிழமேல் 20 அடி அகலமும், தென்வடல் 65 அடி நீளமும் உள்ள பாதையிலும், அதைத் தொடர்ந்து வடபுறம் எ.சண்முகவேலுபிள்ளை அவர்களுக்கு பாத்தியப்பட்ட சர்வே 211/2 நிர் வரை கிழமேல் 20 அடி அகலத்தில் உள்ள தென்வடல் பாதையும், மேற்படி சர்வே 210 நிரில் மத்தியில் ஏ.எஸ்.மாணிக்கம்பிள்ளை அவர்களால் வீட்டு மனைகளாக பிரித்து போடப்பட்டிருந்த இடத்தின் கீழ்புறம் கிழமேல் 4 அடி அகலமும், தென்வடல் 206 அடி நீளமும், அதன் வடக்குக் கடைசியில் இருந்து தொடர்ந்து மேற்கு முகமாக 300 அடி நீளமும் 4 1/2 அடி அகலமும் நீர்களையும் கொண்டுபோய் மேற்படி சர்வே 210 நிரில் மேற்குகடைசியில் உள்ள மழைத்தண்ணீர், வீடுகளில் கழிவு தென்வடல் ஓடையில் வீட்டுக்கொள்ளும் தென்வடல் மற்றும் கிழமேல் கழிவுநீர் வாய்கால்களும், மேற்படி சர்வே 210 நிரில் கீழ்புறம் ஒட்டன்சத்திரம் தாராபுரம் ரோட்டிலிருந்து மேற்கு முகமாக

ஏ.சண்முகவேலுபிள்ளை அவர்கள் கட்டிடங்களுக்கு மத்தியில் தென்வடல் 11 அடி அகலத்தில் இருந்து 15 அடி அகலம் வரை கிழமேல் 65 அடி நீளத்திலும் உள்ள கிழமேல் பாதையிலும்.

அதைத் தொடர்ந்து மேற்கு முகமாக தென்வடல் 15 அடி அகலமும், கிழமேல் 56 அடி நீளமும் உள்ள கிழமேல் பாதையும், அதைத் தொடர்ந்து மேற்கு முகமாக தென்வடல் 15 அடி அகலமும், கிழமேல் 10 அடி நீளமும் உள்ள கிழமேல் பாதையும், அதைத் தொடர்ந்து மேற்கு முகமாக ஏ.எஸ்.மாணிக்கம்பிள்ளை அவர்களால் வீட்டு மனைக்காக பிரித்து போடப்பட்டிருந்த இடத்தில் உள்ள தென்வடல் பாதை வரை கிழமேல் 80 அடி நீளமும், தென்வடல் 20 அடி அகலமும் உள்ள கிழமேல் பாதையிலும் மேலே விவரிக்கப்பட்டுள்ள பாதைகளின் வழியாக வண்டி, வாகனாதிகள், ஆட்கள் வகையறா போய்வரும் பாதையாக உபயோகித்துக்கொள்ளும் பாதை பாத்தியமும்.

மேலும் மேற்படி கழிவுநீர் வாய்க்கால் வழியாக மழைத்தண்ணீர், கழிவுநீர் திண்டுக்கல் ரோட்டிலிருந்து வடக்கு கடத்திக்கொள்ளும் பாத்தியமும், பழனி – திண்டுக்கல் ரோட்டிலிருந்து வடக்கு முகமாக வரும் பாதை வழியாக தண்ணீர் குழாய், மின்விளக்கு கம்பங்கள் போட்டுக் கொள்ளும் பாத்தியமும் உள்பட மற்றும் சகல பாத்தியங்களும் சேர்ந்து.

**செலவுபட்டியல்**

| | மனுதாரர்/வாதி ரூ.பை | எதிர்மனுதாரர்/பிரதிவாதி ரூ.பை. |
|---|---|---|
| மனுவின் மீதான ஸ்டாம்ப் | ரூ.20.00 | --- |
| வக்காலத்திற்கான ஸ்டாம்ப் | ரூ.10.00 | --- |
| | செலவுபட்டியல் தாக்கல் இல்லை | |
| மொத்தம் | 30.00 | |

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாள் என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.01.29 14:07:48 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**